Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
WEDNESDAY, MAY 3, 2023

புதன்கிழமை, மே 03, 2023 | ஒளி: 08 கதிர்: 262 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE

# எரிவாயு விலை குறையும்




12.5 கிலோ கிராம் நிறை கொண்ட லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை, புதன்கிழமை (03) நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் 100 ரூபாயால் குறைக்கப்படும் என்று லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கண்டி மருத்துவ மாணவன் பெலாரஸில் சடலமாக மீட்பு

ரஷ்யா, பெலாரஸில் மருத்துவ பீடமொன்றில் 4 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் கண்டியைச் சேர்ந்த மருத்துவ மாணவன் (வயது 24) கடந்த சனிக்கிழமை (29.04.2023) மாணவர் விடுதி அறையொன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர், வருடத்தின் சிறந்த மருத்துவ மாணவனாக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கண்டியில் உள்ள பிரபல தனியார் கல்லூரியொன்றில் உயர்தர உயிரியல் பிரிவில் பயின்ற இம்மாணவன் பெலாரஸில் உள்ள மருத்துவ பீடத்தில் சேர்ந்துள்ளார். மாணவனின் தாயார் தனது மகனுக்கு தொலைபேசி மூலம் கடந்த சனிக்கிழமை அழைப்பு விடுத்தபோது, அவர் அழைப்புக்கு பதிலளிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2

### வெசாக் வாரத்தில்

# முகக்கவசம் முக்கியம்

## பொது மக்களிடம் கோரிக்கை

வெசாக் வாரத்தில் பொதுமக்கள் நெரிசல் மிக்க இடங்களில் அதிகமாக நடமாடுவதால் முகக் கவசம் அணிவது சிறந்தது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரிப்பதன் காரணமாக மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2

### டயானாவின் மனு மீதான

## பரிசீலனைக்கு திகதி குறிப்பு



ஐக்கிய மக்கள் சக்தி, தன்னை கட்சியில் இருந்து நீக்கியமையை சவாலுக்கு உட்படுத்தி தற்போதைய இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தாக்கல் செய்திருந்த மனுவை ஜூன்மாதம் 8ஆம் திகதியன்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதற்கு உயர்நீதிமன்றம், செவ்வாய்க்கிழமை (02) தீர்மானித்தது.

தொடர்ச்சி P2

## நபரை கடத்தி சித்திரவதை: பெண்கள் உட்பட 11 பேர் கைது

வவுனியாவைச் சேர்ந்த நபர் ஒருவரை கடத்தி வந்து வீடொன்றில் அடைத்து வைத்து சித்திரவதை செய்தனர் என்றக் குற்றச்சாட்டின் பேரில் 3 பெண்கள் உட்பட 11 பேர் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வான் ஒன்றும் 3 மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வெளிநாடு அனுப்புவதாக கூறி வேலணையைச் சேர்ந்த நபர்களிடம் 10 லட்சம் ரூபாய் பணத்தை வுனியா பூவரசம்குளம் பகுதியை சேர்ந்த 34 வயதுடைய முச்சக்கரவண்டி சாரதி வாங்கியுள்ளார். எனினும் நீண்ட நாள்களாக வெளிநாடு அனுப்புவதற்கான நடவடிக்கையை அவர் எடுக்கவில்லை.

தொடர்ச்சி P2



### எக்ஸ்பிரஸ் பேர்ள் விவகாரம்

## வழக்கை தடுப்பதற்கு ரூ.8,000 கோடி இலஞ்சம்

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்தினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து வழக்குத் தாக்கல் செய்யப்படுவதை தடுப்பதற்காக இலங்கையருக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படும் பாரிய இலஞ்சத் தொகையான 8 ஆயிரம் கோடி ரூபாய், இலங்கையின் வருடாந்த சுகாதாரச் செலவீனதுக்கு சமம் என்று சுதந்திர மக்கள் முன்னணியின் செயற்குழு உறுப்பினரும் எம்.பியுமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், செவ்வாய்க்கிழமை (02) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2






## இரண்டு தளபதிகளையும் சந்தித்தார் இந்திய தளபதி

இந்திய விமானப்படையின் படைப்பிரதானி ஏர் சீப் மார்ஷல் வி.ஆர்.சௌத்ரி, இலங்கை விமானப்படைத் தளபதி ஏர் மார்ஷல் சுதர்ஷன பத்திரண மற்றும் இலங்கை கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா ஆகியோரை, செவ்வாய்க்கிழமை (02) சந்தித்தார்.

கொழும்பு விமானப்படை நிலையத்தின் கட்டளை அதிகாரி எயார் கொமடோர் சுரேஷ் பெர்னாண்டோவினால் வரவேற்கப்பட்டதுடன் அவருக்கு விமானப்படையின் வண்ணப் படையணியினால் கௌரவிப்பு மரியாதை வழங்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## மதச் சுதந்திரம் தடைப்பட்டுள்ளது

இலங்கையில் மதச் சுதந்திரம் தடைப்பட்டுள்ளதாகவும் இலங்கையில் இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களின் மத சுதந்திரம் மீறப்பட்டுள்ளதாகவும் சர்வதேச மதச் சுதந்திரத்துக்கான அமெரிக்க ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### அதிக வசதிகளைப் பெற




## இலங்கையை மீண்டும் வகைப்படுத்தவும்

### ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் கோரிக்கை

அதிக சலுகை நிதி வசதிகளைப் பெறுவதற்கு உதவும் வகையில் இலங்கையை மீண்டும் வகைப்படுத்துமாறு ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

தென் கொரியாவின் சியோலில் நடைபெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் உப தலைவர் ஷிக்சின் சென் மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### ஜனாதிபதியை சந்திக்கும் வாய்ப்பு

## இன்று கிடைக்கும் என்று நம்பிக்கை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து தமது பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு இன்று (03) நியமனம் கிடைக்குமென நம்புவதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

க.பொ.த உயர்தர விடைத்தாள் மதிப்பீட்டில் இருந்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் விலகுவதற்கு தூண்டிய விடயங்கள் குறித்து கலந்துரையாட ஜனாதிபதியுடன் சந்திப்பொன்றுக்கு நியமனம் வழங்குமாறு சங்கம் கோரிக்கை விடுத்திருந்தது.

தொடர்ச்சி P2



## பேச்சை இனி நிறுத்தி செயலில் காட்டுங்கள்


### ரணிலுக்கு மனோ வலியுறுத்து

இலங்கையில் வாழும் ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்கள் தொடர்பான இனப்பிரச்சினை குறித்து, உங்களுடன் முழுமையாக ஒத்துழைக்க நாம் தயார் என்றும் இனி நீங்கள் பேச்சை நிறுத்தி, செயலில் காட்டுங்கள் என்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் எம்பியுமான மனோ கணேசன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## உத்தரவாதம் வேண்டும் என்றே ஒதுங்கி நின்றோம்

டி.ஷங்கீதன்



தொழிலாளர்களுடைய ஊழியர் சேமலாப நிதிக்கும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கும் ஓர் உத்தரவாதத்தை வழங்க வேண்டும் என்ற காரணத்தினாலேயே தமிழ் முற்போக்கு கூட்டணி சர்வதேச நாணய நிதியம் தொடர்பாக பாராளுமன்ற வாக்களிப்பில் இருந்து ஒதுங்கியிருந்தது என்று மலையக மக்கள்

தொடர்ச்சி P2


### கொழும்பு துறைமுகத்துக்கு அருகேயுள்ள

## களஞ்சியத்தில் கொள்ளையிட முயன்ற கும்பல் மீது சூடு

### 4 பெண்கள் உள்ளிட்ட 9 பேர் காயம்

கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் உள்ள களஞ்சியசாலையில் கொள்ளையிட முயன்றவர்களின் மீது பாதுகாப்பு உத்தியோகத்தர் நடத்திய துப்பாக்கி பிரயோகத்தில் 9 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



### நுவரெலியாவில்

## 4 மாடிகளுக்கு மேல் நிர்மாணிக்க முடியாது

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிதை அடுத்து, நுவரெலியா மாவட்டத்தில் நான்கு தளமாடிகளுக்கு மேற்பட்ட

தொடர்ச்சி P2

## இரு தரப்பினரையும் சந்திக்கிறார் சுரேஷ்

### இன்று முக்கிய தீர்மானம்



ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரின் பிரதிநிதிகளை சந்தித்து முக்கிய தீர்மானத்தை எடுக்கவுள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## கண்டி மருத்துவ மாணவன் பெலாரஸில் சடலமாக மீட்பு

இதனை தொடர்ந்து மாணவனின் தாயார் தனது மகனின் மருத்துவ நண்பர்கள் பலரை அழைத்து, தனது மகனுக்கு தொடர்ந்து அழைப்பு விடுத்தும் அவர் பதிலளிக்காததால், அவரை தொடர்புக்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது சக மருத்துவ மாணவர்கள் அவர் தங்கியிருந்த அறைக்கு சென்று பார்த்த போது மாணவனின் கழுத்தில் கட்டு ஒன்றும், அறையிலுள்ள உயரமான அலுமாரியில் மறுமூலையில் கட்டப்பட்ட கயிறும் காணப்பட்டது. இது குறித்து மருத்துவ மாணவர்கள் மாணவனின் தாயாருக்கு தொலைபேசியில் தகவல் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

## வழக்கை தடுப்பதற்கு ரூ.8,000 கோடி இலஞ்சம்

இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவுக்கு இவ்வாறான பாரிய தொகை குறித்து மக்களுக்கு அறிவிக்கும் பொறுப்பு உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

சிங்கப்பூரில் வழக்குத் தாக்கல் செய்ய பல மில்லியன் டொலர்கள் செலவாகும் என்றும் இலங்கையில் வழக்குத் தாக்கல் செய்யாமல் சிங்கப்பூரில் வழக்குத் தாக்கல் செய்ய சட்டமா அதிபர் தீர்மானித்ததற்கான காரணத்தை வெளியிட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இது ஒரு விசித்திரக் கதையாக இருந்தால், மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக வெளியிடப்பட்டிருக்கலாம் என்றும், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் சம்பவத்தைத் தகர்த்து மக்கள் மனதை வேறு திசையில் செலுத்துவதே இதன் நோக்கமாக இருக்கலாம் என்றும் சுட்டிக்காட்டினார்.

## இலங்கையை...

சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திடம் இருந்து சலுகை நிதியைப் பெறுவதற்கான இலங்கையின் கோரிக்கைக்கு கடந்த டிசெம்பரில் உலக வங்கி அனுமதி வழங்கியிருந்தது.

குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்படும் சர்வதேச அபிவிருத்திச் சங்க நிதியுதவி, பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் வறுமை மற்றும் பட்டினியால் வாடும் மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கும் அரசாங்கம் தலைமையிலான சீர்திருத்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த இலங்கைக்கு உதவியது.

இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக நிலைமைகளின் தொடர்ச்சியான சீரழிவின் விளைவாக இந்த கோரிக்கையானது வருமான மட்டங்களைக் குறைத்தது, வறுமை ஆதாயங்களை மாற்றியது மற்றும் நிதிச் சந்தைகளுக்கான அணுகலைப் பாதித்தது.

சர்வதேச அபிவிருத்திச் சங்க உதவியின் ஊடாக, உலக வங்கியானது சலுகையுடன் கூடிய நிதியுதவி, தொழிநுட்ப உதவி மற்றும் கொள்கை ஆலோசனைகளை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இன்று ...

அண்மைய வரி உயர்வை அரசாங்கம் திரும்பப் பெற வேண்டும் என்று கோரி பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளன உறுப்பினர்கள் முழு அளவிலான தொழிற்சங்க நடவடிக்கையை இந்த வருட ஆரம்பத்தில் ஆரம்பித்தனர்.

அதனைத் தொடர்ந்து கல்வி அதிகாரிகளுக்கும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும் இடையில் பல சுற்று கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

கடந்த வாரம், விரிவுரைகளுக்குத் திரும்புவதாக அறிவித்த சம்மேள உறுப்பினர்கள், விடைத்தாள் மதிப்பீட்டில் பங்கேற்பது ஜனாதிபதியுடனான கலந்துரையாடலுக்குப் பிறகு மட்டுமே சாத்தியமாகும் என்று தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# முகக்கவசம் முக்கியம்

முகக் கவசம் அணிவது ஒரு கட்டாய சட்டம் அல்ல என்றும் அதுவொரு கோரிக்கை என்றும் தெரிவித்த அவர், சுகாதாரப் பழக்க வழக்கங்களை அனைவரும் பின்பற்றுவது மிகவும் அவசியம் என்றார்.

இதனிடையே அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ள கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி டொக்டர் ருவன் விஜயமுனி ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய சோதனைகளின் படி, இலங்கையில் பல வருடங்களின் பின்னர் மீண்டும் "டெங்கு 3" வைரஸ் பரவி வருவதாக தெரிவித்துள்ளார்.

இதனால் ஒருவருக்கு காய்ச்சல் இரு தினங்களுக்கு மேல் காணப்படுமாயின், டெங்கு பரிசோதனை நடத்துவதன் ஊடாக அதனை கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

டெங்கு 3 க்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தியோ, ஆன்டிபாடிகளோ இல்லை என கூறியுள்ள அவர், இந்த வைரஸ் பரவும் அபாயம் காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## இரண்டு தளபதிகளையும் சந்தித்தார் இந்திய தளபதி

இதேவேளை, கடற்படைத் தலைமையகத்தின் நுழைவாயில்களில் கடற்படை மரபுகளுக்கு இணங்க வரவேற்கப்பட்ட இந்திய விமானப்படையின் படைப்பிரதானிக்கு கடற்படையின் முகாமைத்துவ சபையை கடற்படைத் தளபதி அறிமுகப்படுத்தினார்.

இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்கள் குறித்து கருத்துக்களை பரிமாறிக் கொள்ளப்பட்டதுடன், விஜயம் செய்ததன் நினைவுச் சின்னமாக நினைவுச் சின்னங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டதோடு, சுமுகமான சந்திப்புகள் நிறைவுற்றன.

## பேச்சை இனி நிறுத்தி செயலில் காட்டுங்கள்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மேதின செய்தி உரை தொடர்பில் தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை மனோ கணேசன் தெரிவித்தார்.

"இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினை தீர்வு", "பொருளாதார வளர்ச்சிக்கு தேசிய இன ஐக்கியம் அவசியம்" என்று ஜனாதிபதி தெரிவிப்பதாகவும் இதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், இக்கதையை நீங்கள் கடந்த சுதந்திர தினத்துக்கு முன்னிருந்து சொல்லி வருகிறீர்கள் எனவும் பெப்ரவரி நான்காம் திகதியளவில் தீர்வு காண்போம் என்றும் கூறியதாகவும் சுட்டிக்காட்டிய மனோ எம்.பி இப்போதும் மீண்டும், மீண்டும் கூறுகிறீர்கள்.

அதில் மேலும் தெரிவித்த அவர், "இலங்கையில் இன்று இருக்கும் பெரும்பான்மை கட்சி தலைவர்கள் மத்தியில், தேசிய இனப்பிரச்சனை தொடர்பில் காத்திரமான முயற்சிகளை எடுத்தவர், ரணில் விக்கிரமசிங்க. அதில் சந்தேகம் இல்லை. ஏனையோரை பற்றி சந்தேகங்கள் இருக்கின்றன.

எனினும் ஜனாதிபதியாக விக்கிரமசிங்க நியமனம் பெற்ற பின் பலமுறை இந்த கால அட்டவணைக்குள் இனப்பிரச்சினை தீர்வு என பலமுறை கூறிவிட்டார். தமிழ் மக்களுக்கும் இந்த வசனம் பரிச்சயமானதாகும்.

சர்வகட்சி மாநாட்டை நடத்தி முதற்கட்டமாக 13ஐ பற்றி பேசிய போது அதுவரை ஒளிந்திருந்த ஆமதுருக்கள் தெருவுக்கு வந்தார்கள். அத்துடன் அது நின்று போய் விட்டது.

இன்று அரகல போராட்டத்துக்கு பிறகு, கடுமையான பொருளாதார வீழ்ச்சிக்கு பிறகு, சர்வதேச சமூகத்திடம் கையேந்தும் நிலைமை ஏற்பட்ட பிறகு, ஜனாதிபதி விக்கிரமசிங்க, இனப்பிரச்சினை தீர்வுபற்றி, தமிழ் கட்சிகளை அழைத்து பேச முன் சிங்கள கட்சிகளை அழைத்து நாட்டின் உண்மை நிலைமை பற்றி பேச வேண்டும். சிங்கள மக்களை விளித்து நேரடியாக கூற வேண்டும். இனிமேலும் இதை தள்ளி போட முடியாது என எடுத்து கூற வேண்டும். சர்வதேச சமூகமும்அதற்கு சாதகமாக நடந்துகொள்ளும் என நான் அறிகிறேன்.

தற்போது நிலைமையை பாருங்கள். "இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினை தீர்வு", "பொருளாதார வளர்ச்சிக்கு தேசிய இன ஐக்கியம் அவசியம்" என்றெல்லாம் கூறுவதற்கு முன், வடக்கு கிழக்கில் காணி பறிபோகிறது.

தொல்பொருள் திணைக்களம், தொல்லை திணைக்களம் ஆகி விட்டது. சிவனை தூக்கி கடாசி விட்டு, ஆமதுருக்கள், இராணுவ துணையுடன், புத்தனை பிரதிஷ்டை செய்கிறர்கள். காவி உடையில் அரசியல் செய்யும் ஆமதுருக்களை கட்டுக்குள் கொண்டு வர வேண்டும். அதற்கு இதுதான் வேளை. இல்லாவிட்டால் கடும் பதட்ட நிலைமை வடக்கு கிழக்கில் விரைவில் உருவாகும்.

மலைநாட்டில், வந்தவன், போனவன் எல்லாம் அடாத்தாக தோட்ட காணிகளை பிடிக்கிறான். ஆனால், 200 வருட வரலாற்றை தொட்டு விட்ட பெருந்தோட்ட மக்களுக்கு வாழ, பயிர் செய்ய காணி இல்லை.

மலையக தமிழருக்காக நான் குரல் கொடுத்தால், என்னை "தேயிலை கொழுந்து பறிக்க வந்தவன்" என்கிறார்கள். "தோட்டகாட்டான்" என்கிறார்கள். இது மலைநாட்டு பெருந்தோட்ட பகுதிகளில் கடும் பதட்ட நிலைமையை மெதுவாக உருவாக்கி வருகிறது" என்றார்.

## இரு தரப்பினரையும் சந்திக்கிறார் சுரேஷ்

ஐக்கிய மக்கள் சக்தி தலைமை மற்றும் அரசாங்கம் குறித்து தான் வெளியிட்ட சில விமர்சனக் கருத்துக்களின் பின்னர் இரு தலைவர்களும் தன்னை அணுகியதாகவும் இரண்டு தரப்பினரையும் சந்தித்த பின்னர் தனது தலைவிதியை தீர்மானிக்கவுள்ளதாக வடிவேல் சுரேஷ் எம்.பி குறிப்பிட்டுள்ளார்.

பசறை மடுல்சீமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் கூட்டத்துக்கு வருகை தாராத எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எனது மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் என்றும் கூட்டத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் வருகை தராமையானது மக்கள் மத்தியில் இன்றளவும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, பதுளையில் நடத்தப்பட்ட தனியான மே தினப் பேரணிக்கான அனுமதி, மலையகத்தில் உள்ள தோட்ட சமூகத்தினருக்காக வழங்கப்பட்டதாகவும் இதனால் கட்சி பிளவடையாது என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், குறித்த சம்பவத்தைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்து பதவிகளில் இருந்தும் தான் விலகி இருந்ததாகவும் இவ்விடயம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் என் மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் என்பதில் தான் உறுதியாக உள்ளதாகவும் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## களஞ்சியத்தில் கொள்ளையிட முயன்ற கும்பல் மீது சூடு

காயமடைந்த ஆண்கள் 18 முதல் 43 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் பெண்கள் 34 முதல் 62 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் தெரிவித்த பொலிஸார், அனைவரும் புளூமெண்டல் பகுதியில் வசிப்பவர்கள் என்றும் தெரிவித்தனர்.

கொழும்பு துறைமுகத்தின் ஊடாக நிர்மாணிக்கப்படும் அதிவேக நெடுஞ்சாலையின் கீழ் இந்தக் களஞ்சியசாலை அமைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களஞ்சியத்தில் பொருட்களைக் கொள்ளையடிப்பதற்காக, வலுக்கட்டாயமாக நுழைய முயன்ற கும்பல் அங்கிருந்த பாதுகாப்புப் படையினரை எதிர்கொண்டுள்ளது.

அதன்பின்னர், அந்த கும்பல் பாதுகாப்புப் படையினரைத் தாக்கவும், அவர்களின் துப்பாக்கிகளைப் பறிக்கவும் முயன்றதாகவும் அப்போது அவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

## 4 மாடிகளுக்கு மேல் நிர்மாணிக்க முடியாது

புதிய கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு திங்கட்கிழமை (01) முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுங்குமுறைகளை அமுல்படுத்துவதற்கே ஜனாதிபதி யோசனைகளை முன்வைத்திருந்த நிலையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நகரில் பாரிய கட்டடங்களை நிர்மாணிக்காமல் சுற்றுலாப் பயணிகள் ஓய்வு நேரத்தைக் கழிக்கும் வகையில் இலகுவான சூழலுடன் திட்டங்களைத் தயாரிக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்துடன் கலந்தாலோசித்து புதிய கட்டடங்களை நிர்மாணிப்பதை ஒழுங்குபடுத்துவதற்கு மத்திய மாகாண ஆளுநரின் தலைமையில் சம்பந்தப்பட்ட பங்குதாரர் நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட பணிக்குழுவை நியமிக்கவும் சம்பந்தப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் முன்மொழியப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபையானது 38/16/01-06-1978 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் நுவரெலியா மாநகர சபைப் பகுதியை நகரப் பிரதேசமாக பிரகடனப்படுத்தியுள்ளதுடன், நுவரெலியா பிரதேச சபைப் பகுதியும் நகரப் பிரதேசமாக வர்த்தமானி அறிவித்தல் இல. 154614/01-09-1998 மூலம் அறிவிக்கப்பட்டது.

நுவரெலியா மாவட்டம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடையே பிரபலமான சுற்றுலாத் தலமாகும். இப்பகுதியில் நடக்கும் முறைசாரா வளர்ச்சி, குறைந்த வசதிகள் கொண்ட குடியிருப்புகள், தரமற்ற குடிநீர், போதிய உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாதது நிர்மானிக்க முடியாது.

## எரிவாயு விலை குறையும்

5 மற்றும் 2.3 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டர்களின் விலையும் குறையும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

12.5 கிலோகிராம் லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 1005 ரூபாயாலும் 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 402 ரூபாயாலும் 2.3 கிலோகிராம் சிலிண்டரின் விலை 183 ரூபாயாலும் ஏப்ரல் 4ஆம் திகதி குறைக்கப்பட்டிருந்தன.

கடந்த பெப்ரவரி 5ஆம் திகதி விலை உயர்த்தப்பட்டதுடன் மார்ச் மாதத்தில் சிலிண்டர் விலைகளை லிட்ரோ நிறுவனம் அதிகரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பரிசீலனைக்கு திகதி குறிப்பு

பிரியந்த ஜயவர்தன, குமுதினி விக்கிரமசிங்க மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய மூவரடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்த தீர்மானம் அறிவிக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, கட்சியின் பொதுச் செயலாளர், பாராளுமன்ற செயலாளர் நாயகம், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் உட்பட பலர் மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்த காரணத்தால், 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் 8ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலம் தன்னை கட்சியில் இருந்து வெளியேற்றுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அது கட்சியின் யாப்பை மீறும் வகையான தீர்மானம் என அறிவிக்குமாறு மனுவில் கோரியுள்ளார்.

அரசாங்கத்தின் உறுப்பினர் அல்லாத தான், கட்சியின் யாப்புக்கு அமைய சுதந்திரமாகவும் தனது மனசாட்சிக்கு இணங்கவும் செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர் என்றும் கட்சி உறுப்புரிமையிலிருந்து தன்னை நீக்குவதற்கான தீர்மானம் சட்டவிரோதமானது என்றும் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நபரை கடத்தி சித்திரவதை பெண்கள் உட்பட 11 பேர் கைது

முச்சக்கரவண்டியை இளம் பெண்கள் வாடகைக்கு அமர்த்தியுள்ளனர். குறிப்பிட்ட இடத்தில் வைத்து முச்சக்கர வண்டியில் இருந்து சாரதியை இறங்கிய 10 பேர் கொண்ட கும்பல் அவரை அடித்து வானில் ஏற்றி யாழ்ப்பாணத்துக்கு கடத்திச் சென்றுள்ளது.

கொக்குவில் தாவடியில் வீடொன்றில் அடைத்து வைத்த அந்தக் கும்பல் அவரை மிரட்டி 10 இலட்சம் ரூபாய் தர வேண்டும் என்ற கடிதம் ஒன்றை எழுதி வாங்கியுள்ளது

கிடைத்த தகவல்களுக்கு அமைய பொலிஸார் அவ்வீட்டை சுற்றுவளைக்க முற்பட்டனர். எனினும், அந்தக் கும்பல் வானில் மன்னார் செல்ல முற்பட்டுள்ளது. கும்பல் பயணித்த வான் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் கடமையில் நின்ற போக்குவரத்து பொலிஸாரின் உதவியுடன் வழிமறிக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டது.

அதன்பின்னர். யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினர் வாகனத்தில் இருந்தவர்களுடன் கொக்குவில் தாவடி பகுதியில் உள்ள வீட்டை சுற்றி வளைத்தனர்.

கடத்தப்பட்டவர் அடிகாயங்களுடன் அந்த வீட்டில் காணப்பட்டுள்ளார். அவரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பொலிஸார் சேர்த்தனர். சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்றக் குற்றச்சாட்டின் பேரில், மூன்று பெண்கள் உட்பட 11 பேர் கைது செய்யப்பட்டனர்.

## மதச் சுதந்திரம் தடைப்பட்டுள்ளது

2023 ஆம் ஆண்டுக்கான தனது அறிக்கையை வெளியிட்டுள்ள குறித்த சுயாதீன ஆணைக்குழு, இந்த மனித உரிமை மீறல்கள் குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை கவனம் செலுத்த வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் சில மதத் தலைவர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்றும் இலங்கைக்கு மேலதிகமாக ஆப்கானிஸ்தான், இந்தியா, சீனா, நைஜீரியா மற்றும் நிகரகுவா ஆகிய நாடுகளிலும் மத சுதந்திரம் தடைப்பட்டுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசாங்கத்தை மதச் சுதந்திர கறுப்புப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்றும் அந்த ஆணைக்குழு நான்காவது ஆண்டாக பரிந்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உத்தரவாதம் வேண்டும் என்றே ஒதுங்கி நின்றோம்

முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

மலையகம் 200 எனும் தொனிப் பொருளை மையப்படுத்தி மலையக மக்கள் முன்னணி ஏற்பாடு செய்கின்ற நிகழ்வுகளில் முதலாவது நிகழ்வு அண்மையில் ஹட்டன் மலையக மக்கள் முன்னணியின் கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெற்றது.

அதில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில், "200 வருட மலையக மக்களின் வரலாற்றில் முதன்முறையாக எந்த ஒரு தொழிற்சங்கமும் மேதினத்தை கொண்டாடுவதற்கான எந்தவிதமான ஏற்பாடுகளையும் செய்யவில்லை. அதற்கு முக்கிய காரணம் அதனை கொண்டாடுகின்ற நிலையில் மலையக தொழிலாளர்கள் இல்லை.

கடந்த காலங்களில் மலையக தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதியையும் ஊழியர் நம்பிக்கை நிதியையும் யானை விழுங்கிவிட்டதாக பொய்யான பிரசாரங்களை ஒரு சிலர் தேர்தல் காலங்களில் மேடைகளில் பேசிவந்தார்கள்.

எனவே இன்று அதன் கட்சியின் தலைவர் ஜனாதிபதியாக இருப்பதன் காரணமாக மலையக மக்களுக்கு உண்மையிலேயே இதனை யானை தின்றவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே அதற்கான உத்தரவாதத்தை ஜனாதிபதி வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். இதன் காரணமாகவே மலையக மக்கள் மேதினமான தொழிலாளர் தினத்தை கொண்டாடுவதற்கான ஆர்வத்தை காட்டவில்லை.

எந்தவிதமான பாதிப்பும் ஏற்படுத்தப்படமாட்டாது என்ற உத்தரவாதத்தை ஜனாதிபதி வழங்கியுள்ளார் என்றார்.

## வரணி விபத்தில் ஒருவர் பலி

எஸ் தில்லைநாதன்

யாழ்.தென்மராட்சி கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வரணிப்பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை (02) விடிகாலை 12.10 மணியளவில் வரணி எருவன் பகுதியில் கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் இடம்பெற்றுள்ளது.

வடமராட்சி அல்வாய் பகுதியிலிருந்து கொடிகாமம் நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளும் கொடிகாமத்திலிருந்து வடமராட்சி நோக்கி சென்ற வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

குறித்த விபத்தில் படுகாயமடைந்த நபர் அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## மாணவர்களை சேர்க்க எழுத்துமூல அனுமதி

ஏ.எல்.நிப்றாஸ்

அக்கரைப்பற்று அரசினர் ஆண்கள் வித்தியாலயத்தில் அடுத்த கல்வியாண்டில் தரம்-11 இற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு எழுத்துமூல அனுமதியை வழங்கியுள்ளது.

அத்துடன் 2023 கல்வியாண்டுக்காக தரம் 10 இற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஆண்கள் வித்தியாலயமானது வகை-2 (தரம் 1-11) வகைப்படுத்தலுக்குரிய பாடசாலையாக கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

1945ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில், இதுவரை இப் பாடசாலையில் தரம் 9 வரை மாணவர்கள் கல்வி கற்றுவந்த நிலையில், அதனை மேலும் தரமுயர்த்துவதற்கு கடந்த காலங்களில் பல முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும், அவை கைகூடியிருக்கவில்லை.

# பாடசாலைக்கு பூட்டு: குளவிகளை பொசுக்கினர்



ரஞ்சித் ராஜபக்ஷ

பாடசாலை மாணவர்கள் சிலரை, குளவிகள் கலைந்து செவ்வாய்க்கிழமை (02) காலை கொட்டியதை அடுத்து, பாடசாலை இழுத்து மூடப்பட்டதுடன் குளவி கூடு, தீ வைத்து பொசுக்கப்பட்டது.

ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட நோர்வூட் எல்பட தமிழ் வித்தியாலய மாணவர்கள் சிலரே குளவிகள் கொட்டியுள்ளன. இதனையடுத்து பாடசாலை தற்காலிகமாக மூடப்பட்டது.

பாடசாலைக்கு அருகில் உள்ள மரமொன்றில் கட்டியிருந்த குளவி கூடு கலைந்து, பாடசாலைக்கு வருகைதந்து கொண்டிருந்த மாணவர்கள் சிலரையும் வேலைக்குச் சென்றுக்கொண்டிருந்த தொழிலாளர்கள் சிலரையும் கொட்டியுள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் மூவரும் தொழிலாளர்கள் இருவரும் டிக்கோயா-கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளன.

கலைந்த குளவிகள் பாடசாலைக்குள் புகுந்தமையால் ஹட்டன் வலயக்கல்விக் காரியாலயத்தின் அனுமதியுடன் பாடசாலை தற்காலிகமாக நேற்று (02) மூடப்பட்டது.

குளவி கூட்டை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால், கோபமடைந்த தொழிலாளர்கள் தீயிட்டு பொசுகிவிட்டனர்.

## மகிழ்வோம் மகிழ்விப்போம்

தீஷான்அஹமட்



திருகோணமலை வெருகல் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பின்தங்கிய 5 தமிழ் பாடசாலைகளை குறிக்கோளாய் வைத்து அம்மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் மகிழ்வோம் மகிழ்விப்போம் எனும் தொணிப் பொருளைக் கொண்ட வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வும், சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வும் பூநகர் திருவள்ளுவர் வித்தியாலயத்தில் திங்கட்கிழமை (01) இடம்பெற்றது.

இந்நிகழ்வை வெருகல் பிரதேச பல்கலைகழக மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

05 வருட திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்நிகழ்வை ஸ்பெயின் நாட்டில் வசிக்கும் சமூக செயற்பாட்டாளரும் ,இவ் வேலைத்திட்டத்தின் உறுதுணையாக இருந்த நேதாஜியின் தாயார் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

இதன்பின்னர் அதிதிகளால் மங்கள விளக்கேற்றி நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன. இந்நிகழ்வில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்த சாதனையாளர்கள் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் ஈச்சிலம்பற்று கோட்டக் கல்விப்பணிப்பாளர்,பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள், துறைசார் உத்தியோகத்தர்கள்,சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், பூநகர் பிரதேச சமூக மட்டத் தலைவர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## சுத்தம் செய்தல் ஆரம்பம்



ஹட்டன் பிரதான பஸ் நிலையத்துக்கு அண்மித்த பகுதிகளை சுத்தம் செய்யும் நடவடிக்கை ஹட்டன்-டிக்கோயா நகர சபையின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றது. நீண்ட கால குப்பை பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையிலேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

பஸ் நிலையத்தை அண்மித்த பகுதியில் குப்பைகள் தேங்கியிருந்தமையால். பஸ் நடத்துனர்கள், சாரதிகள் மற்றும் பயணிகள் உள்ளிட்ட பொதுமக்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தனர்.

இந்த குப்பை தொடர்பில் நீண்டகாலமாக விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக சுத்தப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

## 225 பேருக்கு காணி பகிர்ந்தளிக்கப்படவில்லை

யது பாஸ்கரன்

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழான சிறுபோக செய்கைக்கான இறுதித் திகதி நிறைவடைந்தும் இதுவரை உள்ள 225 விவசாயிகளுக்கு சிறுபோக செய்கைக்கான காணி பகிர்ந்தளிக்கப்படாதா நிலை காணப்படுகின்றது.

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழ் இவ்வாண்டு 13ஆயிரத்து 500 ஏக்கர் சிறுபோக செய்கைக்கு தீர்மானிக்கப்பட்டு அதற்கான திகதிகளும் அறிவிக்கப் பட்டு பயிர் செய்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் சிறுபோக செய்கைக்கு உள்வாங்கப்படாத பிரதேசங்களில் இருக்கின்ற விவசாயிகளுக்கு சிறுபோக செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் இதுவரை பயிர் செய்கை;க்கான காணிகள் வழங்கப்படாத நிலை கானப்படுகிகின்றது.

குறிப்பாக சிறுபோக செய்கைக்கு உள்வாங்கப்படாத பிரதேசங்களில் இருக்கின்ற விவசாயிகளிடமிருந்து நிலக்குத்தகையை கோருதல் நீர்பங்குளை கோருதல் போன்ற செயற்பாடுகளால் தொடர்ந்தும் பாதிக்கப்படுவதாக மேற்படி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறாள நிலையில் இரணைமடுக்குளத்தின் கீழான சிறுபோக செய்கைக்கான இறுதித் திகதி நிறைவடைந்தும் இதுவரை உள்ள 225 விவசாயிகளுக்கு சிறுபோக செய்கைக்கான 98.25 ஏக்கர் காணி பகிர்தளிக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

## மாணவர்கள் இருவரும் தங்கப்பதக்கம் வென்றனர்

க.விஜயரெத்தினம்



கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட விஞ்ஞான வினா-விடைப்போட்டியில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி மாணவர்கள் இருவருக்கு தங்கப்பதக்கம் கிடைத்துள்ளது.

கிழக்கு மாகாணக் கல்வித்திணைகளத்தினால் மாகாணத்திலுள்ள 17 கல்வி வலயங்களுக்கிடையிலும் உள்ள மாணவர்களுக்கிடையில் விஞ்ஞானக்கல்வியை ஊக்குவித்தல் எனும் திட்டத்தின்மூலம் மும்மொழியிலும் விஞ்ஞான வினா விடைப்போட்டியை கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் அகிலா கனகசூரியம் தலைமையில் மட்டக்களப்பு கிரான் மத்திய கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை (30)நடாத்தியது.

தரம்-6 தொடக்கம் 11 வரையுள்ள மாணவர்களுக்கு நாடாத்தப்பட்ட போட்டியில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியைச் சேர்ந்த ந.விஷால்,உ.துவாரகேஸ்,ஆகிய இருமாணவர்களும் பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை பெற்றுள்ளார்கள்.

மேலும் இப்போட்டியில் கல்லூரியைச் சேர்ந்த 8 மாணவர்கள் பங்குபற்றி வெ ண்கலம்,வெ ள்ளிப்பதக்கங்களையும் பெற்றுள்ளார்கள். இப்பாடசாலையை சேர்ந்த 10 மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து நற்சான்றிதழ்களும் மாகாணக்கல்வி பணிப்பாளரினால் வழங்கி வைக்கப்பட்டது.

இப்போட்டிக்கான வழிகாட்டல்களையும்,ஆலோசனைகளையும் கல்லூரியின் அதிபர் இராசதுரை பாஸ்கர் மற்றும் விஞ்ஞானப்பாட ஆசிரியர்களான திருமதி.கௌசல்யா வினாயகமூர்த்தி,திருமதி. கிருஸ்ணா தேவகுமார்,தர்மினி துழசிதாசன்,இரா. வரதராஜா,பீ.யோகானந்தன் ஆகியோர்கள் வழங்கி போட்டியில் வெற்றிபெறச் செய்துள்ளதுடன் பாடசாலைக்கும்,பெற்றோர்களுக்கும் பெருமையை ஈட்டித்தந்துள்ளார்கள்.

உலக ஊடக சுதந்திர தினம் 2023



ஏனைய உரிமைகளின் எதிர்காலத்தை வடிவமைத்தல்

ஏனைய அனைத்து மனித உரிமைகளுக்கும் அதிகாரமளிப்பதற்கு கருத்துச் சுதந்திரத்தை முதன்மை இயக்கியாக்குவோம்

ஜனநாயகம் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வரும் சகாப்தத்தில், ஏனைய அனைத்து அடிப்படை மற்றும் மனித உரிமைகளுக்கும் அதிகாரம் அளிக்க கருத்துச் சுதந்திரத்திற்கு முன்னுரிமை அளிப்பது பிரதானமானது.

25 YEARS ANNIVERSARY 1998 - 2023

இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் அதன் அங்கத்தவர்களும் இவ்வருட உலக ஊடக சுதந்திர தினத்தில் "ஊடக சுதந்திரம் மற்றும் சமூகப் பொறுப்புக்கான கொழும்பு பிரகடனம், 1998-2023" இன் 25வது ஆண்டு நிறைவை நினைவுகூருகின்றனர்.

#WorldPressFreedomDay2023

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute
NSSL
TEGOSL
FMM Free Media Movement
SLWJA

# அனைவரும் முகக்கவசம் அணிந்து எதிர்கால பேராபத்தை தடுப்போம்

பொதுப் போக்குவரத்தில் பயணிப்போர், பொது இடங்களுக்குச் செல்வோரில் பலர், இன்னும் முகக்கவசங்களை அணிந்துகொண்டிருப்பதை நாமெல்லாம் அவதானித்து இருப்போம். கொரோனாவுக்கு முற்பட்ட காலங்களில் ஒருசிலர் மட்டுமே அணிந்திருந்தனர். கொரோனா காலத்தில் அனைவரும் அணிந்தனர்.

தொற்றின் வேகம் குறைந்து, முகக்கவசத்தை அணியவேண்டிய தேவையில்லை என சுகாதார அமைச்சினால் விடுக்கப்பட்ட அறிவிப்பை அடுத்து, பெரும்பாலானவர்கள் அணிவதை தவிர்த்துக்கொண்டுள்ளனர். எனினும், முக்கியமான சில இடங்களுக்குள் நுழைவதற்கு முன்னர், முகக்கவசத்தை அணிந்துகொண்டு உள்ளே நுழையுங்கள் என்று அறிவித்தல்கள் தொங்கவிடப்பட்டுள்ளன.

வயதானவர்கள் இன்னும் முகக்கவசங்களை அணிந்துகொண்டு பயணிப்பதை அவதானிக்க முடிகிறது. கொரோனா மட்டுமன்றி ஏனைய தூசுகள் மற்றும் துர்மணங்களில் இருந்து தற்பாதுகாத்துத் கொள்ளும் நோக்கிலேயே அணிந்து செல்கின்றனர். இது ஓரளவுக்கு நல்ல பழக்கமாகும்.

கொரோனா காலத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் அனுபவம் இருக்கும். ஆகையால் கடந்த காலங்களில் கற்ற கசப்பான பாடங்களின் அனுபவத்தைக் கொண்டு, மீண்டும் முகக்கவசத்தை அணிந்துகொள்ளவேண்டும். அதனை சுகாதார தரப்பினர் மீண்டுமொரு வலியுறுத்தவேண்டும்.

கொரோனா தொற்றின் வேகம் இலங்கையில் அதிகரித்துள்ளது. புத்தாண்டு கொண்டாட்டங்கள் களைகட்டின. மக்களின் நடமாட்டமும் அதிகரித்திருந்தது. அதேநேரத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 672,183ஆக பதிவாகியுள்ளது. மே. 2ஆம் திகதி மட்டும் புதிய தொற்றாளர்கள் அறுவர் இனங்காணப்பட்டுள்ளனர்.

வெசாக் வாரமும் வருகின்றது. ஆங்காங்கே வெசாக் தோரணங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. மக்கள் சாரைசாரையாக படையெடுப்பர். அந்தவாரத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்குமென ஊகிக்க முடியும். ஆகையால், முகக் கவசம் அணிவது சிறந்தது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்தனவின் அறிவுறுத்தலை பின்பற்றுவது அவசியம்.

இதனிடையே, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய சோதனைகளின் படி, இலங்கையில் பல வருடங்களின் பின்னர் மீண்டும் "டெங்கு 3" வைரஸ் பரவி வருவதாக கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி டொக்டர் ருவன் விஜயமுனி தெரிவித்துள்ளார். இதனால் ஒருவருக்கு காய்ச்சல் இரு தினங்களுக்கு மேல் காணப்படுமாயின், டெங்கு பரிசோதனையை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் கொரோனா தொற்றின் ஊடாக பல்வேறு பாடங்களை கற்றிருக்கின்றோம். நீண்ட நாட்களாக நாடே முடக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு துறைகளில் பல பாதிப்புகள் ஏற்பட்டன. அதிலிருந்து மீண்டெழ முடியாத நிலைமையே ஏற்பட்டது.

ஆகையால், கடந்தகால கசப்பான பாடங்களில் கற்றுக்கொண்டவற்றில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கும் ஏனையோருக்கு தொற்றாமல் இருப்பதற்குமான ஆகக்குறைந்த கவசமான முகக்கவசத்தை அணிந்துகொள்வதே சாலச் சிறந்தது.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

ஞானத்தைத் தேடுபவர்களில் பலர் ஆசைகளைப் பெருக்கியபடியேதான் இருக்கின்றார்கள். ஞானம் என்பது கடைச்சரக்கு அல்ல; அறிவுக்கும் மேலான மெய் அறிவு.

சாதாரணமான விடயமாக ஆன்ம ஞானத்தை நினைத்தலாகாது. பூரணத்துவமானவர்கள் மௌனமானவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால், அதிகம் பேசி மக்களைக் குழப்பும் 'சுவாமி'கள் என்று தங்களைத் தாங்களே முத்திரை குத்திக் கொள்பவர்கள் அதிகமாகி விட்டார்கள். எதையும் எதிர்பாராத, சுயநலன் எதுவும் அற்ற, ஆசைகளோடு இணையாத, தூயநெஞ்சு உடைய மனிதனே, ஆன்மிகம் பற்றிப் பேசுவதற்கு உரிமை உள்ளவன் ஆவான். செல்வம், புகழ், அதிகாரம் உள்ளவர்கள் பின்னால் செல்பவர்களால், ஆன்ம அறிவு பெறுவது எப்படி?

சகல கல்வியறிவையும் மக்கள் தேடிப் பெற வேண்டும். கல்வி ஒருவருக்கு அவசியமானது. பெற்ற கல்வியைப் புனிதமாகக் கொண்டு இயங்க வேண்டும்.

எளியோருக்கு இரங்குதல், வசதியற்றவர்களுக்கு இலவச கல்வியூட்டல், பொதுநல சேவை எல்லாமே தர்மத்துடன் இணைந்தவை. ஆன்ம எழுச்சியை உருவாக்குக!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# விமல் கண்ட பயங்கர கனவு



ஏம்.எஸ்.எம். ஐயூப்

சரியாக ஒரு வருடத்துக்கு முன்னர் நாட்டில் மிகப் பெரும் பதற்ற நிலைமை நிலவியது. ஒரு புறம் பொருளாதார நெருக்கடியால் மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டு ஆர்ப்பாட்டங்களை நடத்தி வந்தனர். கொழும்பு காலிமுகத் திடலில் தொடர் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்று வந்தது. நாடே ஒருவகையில் ஸ்தம்பிதமடைந்து இருந்தது.

மறுபுறம் பொருளாதார பிரச்சினைகளை தீர்க்க முடியாது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் தடுமாறிக் கொண்டு இருந்தது. ஜனாதிபதிக்கு தமது அலுவலகத்துக்குச் செல்ல முடியாதவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் அவ்வலுவலகத்தின் நுழைவாயிலை மறித்துக் கொண்டு கோஷம் எழுப்பிக் கொண்டு இருந்தனர்.

'அரகலய' (போராட்டம்) என்று பொதுவாக ஆங்கில ஊடகங்களும் அழைத்த அந்த மக்கள் எழுச்சியின் பின்னால் தமிழீழ விடுதலை புலிகளே இயங்கினர் என்று இப்போது அரசாங்க தலைவர்களில் சிலர் கூறுகின்றனர். மற்றும் சிலர் இதன் பின்னால் அமெரிக்கா இயங்கியதாக கூறுகின்றனர்.

ரணில் ஜனாதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட உடன் அடுத்த நாளே காலிமுகத் திடலில் போராட்டக் களத்தில் இருந்த போராட்டக்காரர்கள் இராணுவத்தினரைக் கொண்டு அடித்து விரட்டப்பட்டனர். அதன் பின்னர் பெருளாதார ரீதியாக நாட்டை அழிவுப் பாதையில் இழுத்துச் சென்ற ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னயினர் மீண்டும் தலைதூக்கலாயினர். இப்போது அவர்கள் அந்தப் போராட்டத்துக்கு காரணமான பொருளாதார நெருக்கடியை மறந்து போராட்டக்காரர்களை துரோகிகள் என்றும் பயங்கரவாதிகள் என்றும் கூறித் திரிகின்றனர்.

கடந்த வருடம் மே மாதம் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதலை திட்டமிட்டவர்களில் ஒருவராக கருதப்படும் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த போராட்டக்காரர்களை காடையர்கள் என்கிறார். போராட்டத்தின் காரணமாக பிரதமராக பதவியேற்று போராட்டக் களத்துக்கு தேவையான வசதிகளை செய்து கொடுப்பதாக அறிவித்த ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் போராட்டக்காரர்களை பாஸிஸவாதிகள் என்றழைத்தார். அமைச்சர் பிரசன்ன ரணதுங்க எப்போதும் போராட்டக்காரர்களை பயங்கரவாதிகளாகவே கருதுகிறார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்ஷ குடும்பத்தின் பங்கு மிகப் பெரியதாகும். முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அண்மையில் கூட்டமொன்றில் உரையாற்றும் போது புலிகள் அமைப்பின் தோல்வியை அடுத்து ராஜபக்ஷக்களுக்கு எதிராக தீட்டப்பட்ட திட்டமொன்றின் விளைவாகவே கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது என்றார்.

அதைப் பார்க்கிலும் மிகவும் சுவாரஸ்யமான கருத்தென்றை முன்னாள் அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ச முன்வைத்துள்ளார். தாம் விரும்பாத அனைத்தும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேயவாதிகளின் சதியாகவே குறிப்பிடும் அவர் கடந்த வருடம் நடத்தப்பட்ட மக்கள் போராட்டமும் அமெரிக்க சதி என்று கூறுகிறார். இந்தக் கருத்தை முன்வைத்து அவர் சிங்கள மொழியில் ஒரு புத்தகத்தையும் எழுதி கடந்த வாரம் வெளியிட்டார். அந்த சுவாரஸ்யமான கதை தமிழ் பேசும் மக்களிடம் போதியளவில் சென்றடையவில்லை.

'ஒன்பது - மறைந்த கதை' என்ற பெயரிலான அந்த புத்தகத்தில் வரும் கதை கீழ்வருமாறு அமைந்துள்ளது: ஓய்வுபெற்றதன் பின்னர் அமெரிக்காவுக்குச் சென்று அங்கு வாழ திட்டமிட்டு இருந்த கோட்டாபய அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கின் சொல்படியே நடந்து கொண்டார். ஜூலி சங்கின் கட்டுப்பாட்டிலேயே இருந்தார் அவர் காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டம் நடத்திய ஆர்ப்பாட்டக்காரர்களையும் கட்டுப்படுத்தி வந்தார்.

ஆர்ப்பாட்டக்காரர்களை அச்சுறுத்துவதற்காக நிறுத்தப்பட்டு இருந்த பாதுகாப்பு அதிகாரிகளை கட்டுப்படுத்தவும் அமெரிக்கத் தூதுவர் நடவடிக்கை எடுத்தார். ஆர்ப்பாட்டக்காரர்களை அங்கிருந்து வெளியேற்றினால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி நிறுத்தப்படும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

ஆர்ப்பாட்டத்தின் மூலம் கோட்டாபயவின் அரசாங்கத்தை கவிழ்த்து சபாநாயகரின் தலைமையிலான இடைக்காகல அரசாங்கம் ஒன்றை அமைப்பதே அந்த சதியின் நோக்கமாகியது. அதன் போது கோட்டாபயவையும் சில மூத்த இராணுவ அதிகாரிகளையும் ஜனாதிபதி மாளிகையிலேயே கொலை செய்யவும் திட்டமிடப்பட்டு இருந்தது. அந்த இடைக்கால அரசாங்கத்தில் அப்போதைய இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவும் முன்னாள் இராணுவ தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும் முக்கிய பங்கேற்கவிருந்தனர்.

அதன் படி ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டு கோட்டாபய மலைத்தீவுக்கு தப்பியோடிய பின் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கம் செய்துவிட்டு தாமும் இராஜினாமாச் செய்யுமாறு கோட்டாபயவுக்கு கூறப்பட்டது. அதற்காக ஜனாதிபதி செயலாளர் இரண்டு கடிதங்களை தயாரித்து மாலைத்தீவுக்கு அனுப்பினார். ஆனால் கோட்டா தமது இராஜினாமா கடிதத்தில் மட்டுமே கையொப்பமிட்டார்.

இந்த நிலையில் அமெரிக்க தூதுவர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் உத்தியோகபூர்வ இல்லத்துக்குச் சென்று அரசாங்கத்தின் பொறுப்பை ஏற்று இடைக்கால அரசாங்கம் ஒன்றை நிறுவுமாறு கூறியுள்ளார். ஆனால், பிரதமர் ரணில் அப்போதும் பதவியில் இருந்த நிலையில் அது சட்ட விரோதமானது என்று கூறி சபாநாயகர் அதனை மறுத்துள்ளார். ரணிலை பிரதமர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்ய வற்புறுத்தும் நோக்கத்திலேயே அவரது வீட்டுக்கு சிலர் ஜூலை 9 ஆம் திகதி தீவைத்துள்ளனர்.

இது தான் வீரவன்ச கூறும் 'மறைந்த கதை'யாகும். கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி காலிமுகத் திடல் போராட்டம் ஆரம்பமாகியது. மே மாதம் 9 ஆம் திகதி காலிமுகத் திடல் மீதான தாக்குதலை அடுத்து ஏற்பட்ட வன்முறைகளின் மத்தியில் பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷ இராஜினாமாச் செய்தார். ஜூன் மாதம் 9 ஆம் திகதி பஸில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்தார். ஜூலை 9 ஆம் திகதி ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையை கைப்பற்றிக் கொண்ட நிலையில் கோட்டா அன்றே நாட்டை விட்டு மாலைத்தீவுக்குத் தப்பிச் சென்றார். இவ்வனைத்தும் 9 ஆம் திகதிகளில் இடம்பெற்றமையினாலேயே விமல் தமது புத்தக்த்துக்கு 'ஒன்பது' என்று பெயர் வைத்துள்ளார்.

இது பாரதூரமான கதையாகும். ஏனெனில் இந்த சதியின் பின்னால் அமெரிக்க அரசாங்கம் இருந்ததாக கூறும் அதேவேளை அத்திட்டத்தின் படி கோட்டா கொலை செய்யப்படவிருந்ததாகவும் ரணிலை பிரதமர் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்யவிப்பதற்காக அவரது வீடு தீவைக்கப்பட்டதாகவும் விமல் கூறுகிறார்.

இதில் பல முரண்பாடுக்ள இருக்கின்றன. கோட்டா ஓய்வு பெற்று அமெரிக்காவுக்குச் செல்லும் நோக்கில் இருந்தார் என்பதை ஏற்றுக் கொள்ளலாம். 2021 ஆம் ஆண்டு ஆசிரியர்களின் ஆர்ப்பாட்டங்களின் போது ஆர்ப்பாட்டக்காரர்களை அடித்து விரட்டுவோம் என்று அப்போதைய பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கூறிய போது எனக்கு வெளிநாடொன்றுக்காவது போக முடியாத நிலையை உருவாக்க வேண்டாம் என கோட்டா கூறியுள்ளார். அவ்வாறு அவர் தாம் விரும்பியே அமெரிக்க தூதுவரின் கட்டுப்பாட்டில் இருந்தார் என்றால் சதிகாரர்கள் அவரை ஏன் கொலை செய்ய வேண்டும்? அமெரிக்கா தமக்கு கீழ்படிந்த கோட்டாவையே தொடர்ந்து பதவியில் வைத்திருக்க ஏன் விரும்பவில்லை?

கோட்டா அமெரிக்காவை திருப்திப்படுத்தும் வகையில் நடந்து கொண்டார் என்பதை விமல் எல்லாம் நடந்து முடிந்ததன் பின்னரா அறிந்து கொண்டார்? கோட்டாவின் அரசாங்கம் இரகசியமாக மின் நிலையம் ஒன்றை அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு விற்றதை எதிர்த்ததை அடுத்தே விமல், கம்மன்பில ஆகியோரை கோட்டா கடந்த வருடம் மார்ச் மாதம் 3 ஆம் திகதி அமைச்சரவையில் இருந்து வெளியேற்றினார். அவ்வாறு இருந்தும் கோட்டா பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்று அவர் ஒருபோதும் கூறவில்லை. கோட்டாவை பதவியில் வைத்திருக்கவே அவர் முயன்றார்.

இடைக்கால அரசாங்கம் ஒன்றை நிறுவ அமெரிக்கத் தூதுவர் சதி செய்ததாக கூறும் விமல்தான் கடந்த வருடம் முதலாவதாக இடைக்கால அரசாங்கம் ஒன்றை நிறுவ வேண்டும் என்றார். ஆர்ப்பாட்டக்காரர்களின் 'கோட்டா கோ ஹோம்' என்ற சுலோகம் களமிறங்கிய பின்னர் விமலின் தலைமையிலான 11 கட்சி கூட்டணி கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி கோட்டாவை சந்தித்து பொருளாதார பிரச்சினைகளை எதிர்நோக்குவதற்காக சர்வகட்சி இடைக்கால அரசாங்கம் ஒன்றை நிறுவ வேண்டும் என்றது. அதனை ஏற்ற கோட்டா இராஜினாமாச் செய்யுமாறு தமது அமைச்சர்களை பணித்து புதிய அமைச்சரவையில் சேருமாறு ஏனைய கட்சிகளிடம் கோரிக்கை விடுத்தார்.

விமலின் அந்த ஆலோசனையில் இரண்டு நோக்கங்கள் இருந்திருக்கலாம் முதலாவது பதவி நீக்கம் செய்யப்பட்டு இருந்த தாமும் மீண்டும் அமைச்சர் பதவியொன்றை பெற்றுக் கொள்வதாகும். இரண்டாவது அதற்காக கோட்டாவை பாதுகாப்பதாகும். இந்தத் திட்டம் ஆர்ப்பாட்டக்காரர்களின் நிரந்த போராட்டத்தால் முறியடிக்கப்பட்டது. அன்று முதல் அவர் ஆர்ப்பாட்டக்காரர்களை வெறுக்கிறார்.

ரணில் ஜனாதிபதியாக பதவியேற்று ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பெரும் அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டபோது மனிதாபிமானமாக நடந்து கொண்ட ஜனாதிபதியை விரட்டிவிட்டு ஆர்ப்பாட்டக்காரர்களே தமக்கு அழிவை தேடிக்கொண்டதாக அவர் கூறினார். இது அமெரிக்க ஏஜன்டாக அவரே கூறும் கோட்டா மீதான அவரது காதலை காட்டுகிறது.

அமெரிக்கா தமது திட்டத்தை ஏன் கைவிட்டது என்று அவர் கூறுவில்லை. இராணுவத் தளபதியை பாவித்து ஆட்சியை கைப்பற்ற அமெரிக்கா திட்டமிட்டு இருந்தால் அத்திட்டத்தை கைவிடுமா? இது விமல் கண்ட பயங்கர கனவொன்றாகும்.

## கடிதங்கள்

### மந்தக்கதியால் குமட்டுகின்றது

கொட்டக்கலை பிரதேச சபை நிர்வாக பிரிவுக்குட்பட்ட பல பிரதேசங்களில் காணப்படும் குப்பைகளை அகற்றும் பணிகள் மிகவும் மந்த கதியில் நடைபெறுவதாக பிரவேசம் மக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

குறிப்பாக கொட்டக்கலை நகரம் மற்றும் அதனை சூழவுள்ள கிராமங்களில் உள்ள குப்பைகளை அகற்றும் பணிக்காக பிரதேச சபையில் லொறிகள் செல்வது மிக மிக குறைவாக இருப்பதாகவும் பிரவேசம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறைந்தது இரு வாரங்களுக்கு அல்லது மூன்று வாரங்களுக்கு ஒரு தடவை மாத்திரமே பிரதேச சபைக்கு சொந்தமான வாகனங்கள் மூலம் குப்பைகளை அகற்றும் பணிகள் இடம்பெற்று வருவதாகவும் குற்றம் சுமத்தப்படுகிறது.

இதனால் பிரவேசமெங்கும் துர்நாற்றம் வீசும் அதே சமயம் விலங்குகள் குப்பைகளை கிளறி போடுவதன் காரணமாக பிரதேசங்களில் உள்ள வீதிகளில் நடமாடுவது மிகவும் கஷ்டமாக இருப்பதாக பிரதேச மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இவ்விவகாரம் தொடர்பில் பிரதேச சபையின் அதிகாரிகளுக்கு பல தடவைகள் தெரிவித்துள்ள போதிலும் உரிய நடவடிக்கைகளை துரிதமாக எடுப்பதில் சம்பந்தப்பட்டவர்கள் அலட்சியமாக இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கௌசல்யா

## இலங்கை வடமேல் பல்கலைக்கழகத்தின்

# 21 ஆவது விவசாய ஆராய்ச்சிக் கருத்தரங்கு





'AGRES' என்று அழைக்கப்படும் "வேளாண் ஆராய்ச்சி கருத்தரங்கு" 2002 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது, மேலும் B.Sc. (வேளாண்மையில் Hons) இறுதியாண்டு மாணவர்கள் தங்கள் சரியான நேரத்தில் மற்றும் மதிப்புமிக்க ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை அகாடமிகள், விஞ்ஞானிகள், விவசாயிகள், தொழில்துறை பிரதிநிதிகள் மற்றும் விவசாயத் துறையில் உள்ள பிற வல்லுநர்கள் போன்ற பங்குதாரர்களுக்கு வழங்க ஒரு தளத்தை அமைத்து கொடுக்கிறது.

இந்த வருடாந்த ஆராய்ச்சி கருத்தரங்கு இப்போது FAPM கல்வி நாட்காட்டியின் மிகவும் நன்கு அறியப்பட்ட சிறப்பம்சமாக மாறியுள்ளது, ஏனெனில் AGRES ஆராய்ச்சியாளர்கள் தங்கள் கண்டுபிடிப்புகளை விவாதிக்கவும் பகிர்ந்து கொள்ளவும் ஒரு மன்றத்தை வழங்குகிறது, இந்த நிகழ்வின் அமைப்பு இளங்கலை பட்டதாரிகளின் வாழ்க்கைத் திறன்களின் வளர்ச்சிக்கு கணிசமாக பங்களிக்கிறது, இது அவர்களின் தொழில்முறை வெற்றிக்கு ஒரு முக்கியமான தேவையாகும். தற்போதுள்ள நிலைமைகளின் கீழ், நாட்டின் உணவு பாதுகாப்பு மற்றும் விவசாய நிலைத்தன்மை குறித்து தீவிர கவலைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வருடம் 21 ஆவது தடவையாக இலங்கை வடமேல் பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த விவசாய ஆராய்ச்சி கருத்தரங்கு (AGRES) மாகந்துறை, வயம்ப பல்கலைக்கழக வளாகத்தில் மே மாதம் 3 ஆம் திகதி நடைபெறவுள்ளது. துல்லிய வேளாண்மை, வேளாண் பொருளாதாரம், உயிரி தொழில்நுட்பம், தோட்டக்கலை மற்றும் இயற்கை தோட்டக்கலை மற்றும் தோட்ட மேலாண்மை உள்ளிட்ட உயர் மாறுபட்ட கருப்பொருள்களில் இளங்கலை ஆராய்ச்சி செய்த 100 க்கும் மேற்பட்ட இளங்கலை பட்டதாரிகளின் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

21வது AGRES இலங்கையில் ஒரு தனித்துவமான அறிவுப் பகிர்வு தளமாக உள்ளது, ஏனெனில் இது இளங்கலை மாணவர்களின் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை முழு ஆராய்ச்சி வெளியீடுகளாக பரப்பும் ஒரே கருத்தரங்கமாகும். இந்நிகழ்வு FAPM இன் Dean பேராசிரியர் J. C. எதிரிசிங்க மற்றும் ஏற்பாட்டுக் குழுவின் நேரடி வழிகாட்டலின் கீழ் திரு. ரவிந்து பிரபாஷ்வர மற்றும் திருமதி. டில்மி ரத்நாயக்க தலைமையில் , கலாநிதி சுரந்த சல்கொடே (ஒருங்கிணைப்பாளர்), கலாநிதி ஷ்யானிகா லக்மாலி (வெளியீட்டுக் குழு ஒருங்கிணைப்பாளர்), கலாநிதி ஜானக விக்கிரமசிங்க (தளபாட ஒருங்கிணைப்பாளர்), திரு. விராஜித் குருப்பு (விளம்பரக் குழு ஒருங்கிணைப்பாளர்), மிஸ் நதீரா டி சில்வா (நிதி திரட்டும் குழு ஒருங்கிணைப்பாளர்) மற்றும் திரு. சாகர புஷ்பகுமார (சிற்றுண்டிக் குழு ஒருங்கிணைப்பாளர்) அனைத்து ஆசிரிய மற்றும் கல்விசாரா ஊழியர்களின் தளராத ஆதரவுடன் FAPM இன் விவசாய இளங்கலை பட்டதாரிகளால் ஏற்பாடு செய்யப்படும்.

ஆர்வமுள்ள அனைத்து பங்கேற்பாளர்களும் வேளாண் துறையின் புதுமையான ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் குறித்த தங்கள் அனுபவத்தையும் அறிவையும் பகிர்ந்து கொள்ள இந்த முக்கியமான நிகழ்வில் கலந்து கொள்ள வரவேற்கப்படுகிறார்கள்.

# திருகோணமலையில் நுங்கு திருவிழா





வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் காணப்படும் முக்கிய தொழில் துறையான பனை சார் தொழில்துறையை முக்கியப்படுத்தும் நோக்குடன் தளம் அமைப்பினால் "நுங்கு திருவிழா" எனும் பெயரில் சர்வதேச தொழிலாளர் தினமான மே முதலாம் திகதி, கருத்தமர்வு மற்றும் நுங்கு பகிர்வு நிகழ்வு இடம் பெற்றது.

இதன் போது வளவாளராக முன்னாள் சமூக சேவை உத்தியோகத்தர் வேதநாயகம் தபேந்திரன் கலந்து கொண்டிருந்ததுடன், பனை சார் உற்பத்தி மற்றும் பனை சார் பொருளாதாரம் தொடர்பில் மிக உன்னதமான கருத்துக்களை பங்குபற்றுனர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

மேலும் கலாசார உத்தியோகத்தர் வி. குணபாலாவும் பனை சார் பொருளாதாரம்,

அவற்றின் முக்கியத்துவம் தொடர்பில் தன்னுடைய கருத்துக்களை பகிர்ந்து கொண்டிருந்தார்.

அத்துடன் தளத்தின் இயக்குனர் சி. ஹயக்கிரிவன் பனை சார் உற்பத்திகளுடன் தொடர்புடைய சாதியம் தொடர்பான நடைமுறைகள் தொடர்பில் தனது கருத்துக்களை பகிர்ந்து கொண்டிருந்தார். இதில் பல இளம் சமுதாயத்தினர் கலந்து கொண்டு முக்கிய விடயங்களை அறிந்து கொண்டனர்.

அதன் பின்னர் ஒரு வளமான உணவான நுங்கு பகிர்வு இடம்பெற்றது. இன்றைய காலகட்டத்தில் சமூகம் மறந்து போகும் ஒரு விடயமாக நுங்கு காணப்படுவதுடன், சத்து மிக்க ஓர் உணவுப் பொருளும் ஆகும். அதன் அடிப்படையில் அதனை மீண்டும் இந்த சமூகத்துக்கு வழிகாட்டும் வகையில் இளையோருடன் நுங்கு உண்ணுதல் இடம் பெற்றது.

அ.அச்சுதன்



# நீர்கொழும்பில் வெள்ளக்காடு

எம். இஸட்.ஷாஜஹான்

பலத்த மழை காரணமாக நீர்கொழும்பு, தழுபத்தை பல்லன்சேனை வீதியின் ஒரு பகுதி நீரில் மூழ்கியுள்ளது. இதன் காரணமாக வாகன சாதிகளும் பொதுமக்களும் அசௌரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

மழைக்காலங்களில் இந்தப் பகுதி அடிக்கடி நீரில் மூழ்குவதாகவும் வடிகான் அமைப்பையும் இந்த பகுதியில் ஓடும் வாவியையும் சுத்தம் செய்து சிறந்த முறையில் வடிகானை அமைக்க வேண்டும் என்றும் பிரதேச வாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் உரிய தரப்பினர் எவ்விதமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை என பிரதேசவாசிகள் குற்றஞ்டுகின்றனர்.

வீதியில் இருமருங்கிலும் உள்ள வடிகான்களை அகழப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமாயின் மழைக்காலங்களில் ஓரளவுக்கு நிலைமைகளை சமாளிக்க முடியும் என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.












# ‘காளி சர்ச்சைக்கு’ மன்னிப்பு கோரிய உக்ரேன்

புதுடெல்லி

உக்ரேனின் பாதுகாப்புத்துறை அமைச்சம் வெளியிட்ட காளிதேவி குறித்த சர்ச்சைக்குரிய ட்விட்டர் பதிவிற்காக, அந்நாட்டு துணை வெளியுறவுத்துறை அமைச்சர் எமின் தபரோவா (மே 2) மன்னிப்பு கோரியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், “உக்ரேன் பாதுகாப்பு அமைச்சகம் இந்து கடவுள் காளியை தவறான முறையில் சித்தரித்து ட்வீட் வெளியிட்டிருக்கிறது. நாங்கள் வருந்துகிறோம். உக்ரேன் மற்றும் அதன் மக்கள் இந்தியாவின் தனித்துவமான கலாசாரத்தை மதிக்கிறது. சர்ச்சைக்குரிய அந்த ட்வீட் ஏற்கெனவே நீக்கப்பட்டுவிட்டது. இருதரப்பு உறவு மற்றும் நட்புறவை மேலும் அதிகப்படுத்துவதற்கு உக்ரேன் தீர்மானித்துள்ளது” என்று தெரிவித்துள்ளார்.





உக்ரேன் பாதுகாப்புத் துறையால் நீக்கப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய ட்வீட்டில் இந்துக் கடவுளான காளி தவறான முறையில் சித்திரிக்கப்பட்டிருந்தார். கலை வேலைப்பாடு என்று தலைப்பிடப்பட்டிருந்த அந்த ட்விட்டர் பதிவில் இணைக்கப்பட்டிருந்த படங்கள் ஒன்றில், குண்டுவெடித்து வரும் புகையின் மேலே காளியின் படம் வைக்கப்பட்டிருந்தது.

## ஐ.எஸ்., தலைவர் சுட்டுக்கொலை

அங்காரா

‘‘சிரியாவில், துருக்கி படைகள் நடத்திய தேடுதல் வேட்டையில், ஐ.எஸ்., பயங்கரவாத குழு தலைவர் அபு ஹுசைன் அல்- குரைஷி சுட்டுக் கொல்லப்பட்டார்,’’ என, அந்நாட்டு ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகன் அறிவித்துள்ளார்.

மேற்காசிய நாடான துருக்கி, அதன் அண்டை நாடான சிரியாவின் எல்லையில், பயங்கரவாத தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. 2020 முதல், வடக்கு சிரியாவை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் துருக்கி, ஐ.எஸ்., பயங்கரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்நிலையில், ‘‘சிரியாவில், துருக்கி படைகள் நடத்திய தேடுதல் வேட்டையில், ஐ.எஸ்., தலைவர் அபு ஹுசைன் அல்- குரைஷி சுட்டுக் கொல்லப்பட்டார்,’’ என, அந்நாட்டு ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகன் அறிவித்துள்ளார்.





## காளை மயங்கி விழுந்தது

புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்டம் வடசேரிப்பட்டியில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியில் அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரின் காளை அவிழ்த்து விடப்பட்டது. வாடிவாசலில் இருந்து சீறிப்பாய்ந்து வந்த காளையை அடக்குவதற்காக ஜல்லிக்கட்டு வீரர்கள் ஆர்வத்துடன் முன்னேறிக் கொண்டு சென்றனர்.

அப்போது வாடிவாசலில் இருந்து வெளியே வரும் வழியில் வைக்கப்பட்டிருந்த கட்டையின் மீது காளை மோதியது. இதனால் நிலைக்குலைந்த காளை, அங்கேயே மயங்கி சரிந்தது. இதையடுத்து உடனடியாக விஜயபாஸ்கரின் காளை மீட்கப்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## ‘தி கேரளா ஸ்டோரி’ மனுவை ஏற்க மறுப்பு

புதுடெல்லி

கேரளாவில் 32 ஆயிரம் பெண்கள் வெளிநாடு அழைத்து செல்லப்பட்டு இஸ்லாம் மதத்துக்கு மாற்றப்பட்டு பயங்கரவாத அமைப்பில் இணைக்கப்பட்டதாக ’தி கேரளா ஸ்டோரி’ என்ற திரைப்படத்தின் டிரெய்லர் பெரிய அளவில் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இந்த படத்தை சுதிப்தோ சென் எழுதி இயக்கியுள்ளார்.




எதிர்வரும் 5ஆம் திகதி இந்த படம் வெளியாகும் நிலையில் கடும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது. படத்துக்கு தடை விதிக்க வேண்டும் என காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் தெரிவித்துள்ளன. மேலும் ஆளும் கட்சியான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும் கடும் கண்டனத்தை வெளிப்படுத்தியது.

இந்த நிலையில், தி கேரள ஸ்டோரி படத்துக்கு தடை விதிக்க வேண்டும் என வலியுறுத்தி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரணைக்கு ஏற்க மறுத்த உச்ச நீதிமன்றம், கேரள உயர் நீதிமன்றத்தை அணுகுமாறு மனுதாரரை அறிவுறுத்தியுள்ளது.



## புழுதிப்புயலால் அறுவர் பலி

வாஷிங்டன்

அமெரிக்காவில் உள்ள இலினாய்ஸ் மாகாணத்தில் கடுமையான புழுதிப்புயல் ஏற்பட்டுள்ளது. அங்குள்ள சாங்கமன், மாண்ட்கோமெரி உள்ளிட்ட பகுதிகளில் சாலைகளில் எதிரே வரும் வாகனங்கள் தெரியாத அளவுக்கு புழுதிப்புயல் சூழ்ந்தது.

இதனால் நெடுஞ்சாலைகளில் சுமார் 70-க்கும் மேற்பட்ட கார், லாரி உள்ளிட்ட வாகனங்கள் ஒன்றுடன் ஒன்றாக மோதி விபத்திற்குள்ளாகின. இந்த விபத்துக்களில் இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 37 பேர் படுகாயமடைந்து மருத்துமவனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிகழ்ச்சி நடுவர் திடீரென மரணம்

கென்பரா

பிரபல சமையல் நிகழ்ச்சி ‘மாஸ்டர்செப் அவுஸ்திரேலியா’. இந்த நிகழ்ச்சிக்கு உலகம் முழுவதும் கோடிக்கணக்கான பார்வையாளர்கள் உள்ளனர். இந்த நிகழ்ச்சியின் முக்கிய நடுவராக இருந்தவர் ஜோக் ஜென்ப்ரிலொ (வயது 46).


இந்நிலையில், ஜோக் ஜென்பிர்லொ திங்கட்கிழமை (01) திடீரென உயிரிழந்தார். அவரது மறைவு ரசிகர்கள் இடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஜோக் ஜென்பிர்லொவின் உயிரிழப்பிற்கான காரணம் குறித்து இதுவரை தகவல் வெளியாகவில்லை.

## ஏற்றுமதி முட்டைக்கு விலை நிர்ணயம்

நாமக்கல்

ஏற்றுமதி முட்டைக்குத் தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு (என்இசிசி) முதல்முறையாக விலை நிர்ணயம் செய்கிறது என தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்கத் தலைவர் சிங்கராஜ் தெரிவித்தார்.

நிர்ணயம் செய்யும் விலைக்கே பண்ணையாளர்கள், வியாபாரிகள் முட்டையை விற்பனை செய்யவேண்டும். ஏற்றுமதி முட்டைக்கும் முதல்முறையாக என்இசிசி விலை நிர்ணயம் செய்கிறது.



சந்தை நிலவரத்தைப் பொறுத்து தினசரி முட்டை விலை நிர்ணயம் செய்யப்படும். நாமக்கல்லிலிருந்து முட்டை கொண்டு செல்லும் இடம் வரை போக்குவரத்து செலவைக் கணக்கிட்டு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

80 வாரம் கடந்த வயது முதிர்ந்த கோழியை உடனடியாக விற்பனை செய்ய வேண்டும். அப்போதுதான் கோழிக்கும், முட்டைக்கும் நல்ல விலை கிடைக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# ஐ.பி.எல்: லக்னோவை வென்ற பெங்களூர்

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு 20 தொடரான இந்தியன் பிரீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), லக்னோவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ் உடனான போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பெங்களூர்

பெங்களூர்: 126/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: பப் டு பிளெஸி 44 (40), விராட் கோலி 31 (30), தினேஷ் கார்த்திக் 16 (11) ஓட்டங்கள். பந்துவீச்சு: நவீன்-உல்-ஹக் 3/30 [4], ரவி பிஷ்னோய் 2/21 [4], அமித் மிஷ்ரா 2/21 [3], கிருஷ்ணப்பா கௌதம் 1/10 [2], குருனால் பாண்டியா 0/21 [4], யஷ் தாக்கூர் 0/12 [2])

லக்னோ: 108/10 (19.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: கிருஷ்ணப்பா கௌதம் 23 (13), அமித் மிஷ்ரா 19 (30), குருனால் பாண்டியா 14 (11), நவீன்-உல்-ஹக் 13 (13), மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 13 (19) ஓட்டங்கள். பந்துவீச்சு: கரண் ஷர்மா 2/20 [4], ஜொஷ் ஹேசில்வூட் 2/15 [3], கிளென் மக்ஸ்வெல் 1/3 [1], வனிடு ஹஸரங்க 1/20 [4], ஹர்ஷால் பட்டேல் 1/20 [3.5], மொஹமட் சிராஜ் 1/24 [3])

போட்டியின் நாயகன்: பப் டு பிளெஸி

இந்நிலையில், லக்னோவில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸை லக்னோ எதிர்கொள்ளவுள்ளதுடன், மொஹாலியில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பஞ்சாப் கிங்ஸை மும்பை இந்தியன்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

## மன்செஸ்டர் யுனைட்டெட் செல்லும் ஏப்ரஹாம்?



இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான றோமாவின் முன்களவீரரான தமி ஏப்ரஹாமை பார்வையிட கடந்த வாரயிறுதியில் வீரர்களை நோக்குவோரை இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் அனுப்பியதாகக் கூறப்படுகிறது.

## ஆர்சனல் செல்லும் டெக்லான் றைஸ்?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான வெஸ்ட் ஹாம் யுனைட்டெட்டின் அணித்தலைவரான டெக்லான் றைஸுடன், இன்னொரு பிறீமியர் லீக் கழகமான ஆர்சனலின் முகாமையாளர் மிகேல் அர்டிடா, நடப்புப் பருவகாலம் முடிவடைந்தவுடன் பேச்சுக்களை நடத்த விரும்புவதாகக் கூறப்படுகிறது.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## சமநிலையில் லெய்செஸ்டர் – எவெர்ற்றன் போட்டி

இங்கிலாந்துக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற எவெர்ற்றனுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் லெய்செஸ்டர் சிற்றி சமப்படுத்தியது.

லெய்செஸ்டர் சார்பாக, கக்லர் சொயுஞ்சு, ஜேமி வார்டி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, எவெர்ற்றன் சார்பாகப் பெறப்பட்ட கோலை டொமினிக் கல்வேர்ட்-லூயின், அலெக்ஸ் இவோபி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இன்று மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி:

## பாகிஸ்தானை வெல்லுமா நியூசிலாந்து?

பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியானது கராச்சியில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் பாகிஸ்தான் வென்ற நிலையில், தொடரைத் தக்க வைத்துக் கொள்வதற்கு இப்போட்டியை நியூசிலாந்து கட்டாயம் வென்றாக வேண்டிய நிலையிலுள்ளது.

அந்தவகையில் நியூசிலாந்து எவ்வகையிலாவது பாகிஸ்தானின் விக்கெட்டுகளைக் கைப்பற்றுவது அவசியமாகின்ற நிலையில், பென் லிஸ்டர், கோல் மக்கொஞ்சி, பிளையர் டிக்னர் ஆகியோர் அணியில் இடம்பெறக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகிறது.

பாகிஸ்தானைப் பொறுத்த வரையில் ஹரிஸ் றாஃப்புக்கு ஓய்வு வழங்கப்பட்டு மொஹமட் வாஸிம் களமிறங்கக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 03 மே 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.